# பரீட்சகரின் அறிக்கை

## AA2 பரீட்சை – 2019 யூலை

## (AA25) வியாபாரச் சட்டமும் ஒழுக்கநெறிகளும்

### பகுதி A

**வினா இல. 01**

இவ்வினா 20 புள்ளிகளுக்கான 10 OTQs இனைக் கொண்டிருந்தது.

இவ்வினாவுக்கு பெரும்பாலும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் விடையளிக்க முயற்சித்திருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்தப் புள்ளிகளில் அரைவாசிக்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் வினா இலக்கங்கள் **1.2** மற்றும் **1.10** ஆகியவற்றுக்குச் சரியாக விடையளிக்கத் தவறியிருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

வினா இல. **1.2** ஆனது இலங்கையின் 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பு பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடையை அளித்திருக்கவில்லை. வினா இல. **1.10** ஆனது தொழில்சார் ஒழுக்கநெறிகளின் அடிப்படைக் கோட்பாடுகள் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. எவ்வாறாயினும், பெரும்பாலான பரீட்சார்த்திகள் தொழில்சார் ஒழுக்கநெறிகளுடன் சம்பந்தப்பட்ட நோக்கக் கோட்பாடு பற்றிய விளக்கத்தைக் கொண்டிருக்கவில்லை. பரீட்சார்த்திகள் **பகுதி A** இற்கு உயர் புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனின் இலங்கையிலுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் வேலைச் சட்டகங்கள், சர்வதேச வர்த்தகம், ஒப்பந்தச் சட்டம், பொருட்கள் விற்பனைக் கட்டளைச் சட்டம் போன்றவற்றில் நல்ல விளக்கத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். ஏனெனில், இப்பகுதி சித்தியடையத் தேவையான புள்ளிகளைப் பெறுவதற்குப் பங்களிப்புச் செய்யும் பகுதியாகும்.

**ஒட்டுமொத்தத்தில் இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது.**

### பகுதி B

**வினா இல. 02**

இவ்வினா புலமைச்சொத்துச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவை விளங்கிக் கொள்வதற்குத் தவறியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் மாத்திரமே சரியான விடையினை வழங்கியிருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் சட்டத்தின் சம்பந்தப்பட்ட பிரிவுகளை (9 உம் 10 உம்) அடையாளங் கண்டிருக்கவில்லை. இதனால், தரப்பட்ட விவரணத்திற்கான பகுதியின் தேவைப்பாடுகளை பிரயோகித்திருக்கவில்லை.

**ஒட்டுமொத்தத்தில் இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமாக அமையவில்லை.**

**வினா இல. 03**

இவ்வினா எளிமையானதும் நேரடியானதுமான வினாவாகும். இங்கு காப்புறுதிச் சட்டம் பற்றிய அறிவு பரீட்சிக்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் **அமரா** ஏன் சேதத்திற்கான இழப்பீட்டைப் பெற்றுக்கொள்ள முடியாது என்பதற்கான காரணங்களையும் விவரித்து முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**ஒட்டுமொத்தத்தில் இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது.**

## வினா இல. 04

இவ்வினா ஓரளவு இலகுவான சர்வதேச வர்த்தகத்துடன் தொடர்புடைய ஒரு வினாவாகும். இங்கு CIF விற்பனையாளர் ஒருவரின் கடமைகள் பற்றிப் பரீட்சிக்கப்பட்டது. சில பரீட்சார்த்திகள் சரியான விடைகளைக் குறிப்பிட்டிருந்தனர். சில பரீட்சார்த்திகளால் வினாவை விளங்கிக்கொள்ள முடியவில்லை.

**ஒட்டுமொத்தத்தில் இவ்வினாவுக்கான செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.**

## வினா இல. 05

இவ்வினா பங்குடமைச் சட்டம் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. இங்கு தரப்பட்ட விவரணத்திற்கு கற்றல் வெளியீட்டை எவ்வாறு பிரயோகிப்பது என்பது பரீட்சிக்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் **கமணி**யின் சட்ட உரிமைகளையும் **ராஜா**வின் கடமைகளையும் சரியாக விபரித்திருந்தனர்.

**ஒட்டுமொத்தத்தில் இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது.**

## வினா இல. 06

இவ்வினா நிறுவனச் சட்டம் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் கம்பனிப் பணிப்பாளர்களுக்கு இருக்க வேண்டிய தகைமைகளை அடையாளம் கண்டிருந்ததுடன் பணிப்பாளர்களாக **பியூமி** மற்றும் **ஸ்ரீலால்** இன் பொருத்தப்பாட்டுத் தன்மை பற்றியும் சரியான விவரிப்பை வழங்கியிருந்தனர்.

**ஒட்டுமொத்தத்தில் இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது.**

<u>**பகுதி C**</u>

## வினா இல. 07

இவ்வினா உட்கிடையினால் உருவாகும் முகவராண்மையை அடிப்படையாகக் கொண்டதாகும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினா முகவராண்மைச் சட்டத்துடன் தொடர்புடையது என்பதை அடையாளங் கண்டிருக்கவில்லை. இதனால், சில பரீட்சார்த்திகள் இது கம்பனிச் சட்டத்துடன் தொடர்புடையது எனக் கருதி விடையளித்திருந்தனர்.

சில பரீட்சார்த்திகள் சட்டத்தின் காரண விளக்கங்களைத் தெரிவிக்காது **வரையறுக்கப்பட்ட லயன் கம்பனிக்கு** கொடுப்பனவைச் செய்ய **அலினா**வினால் மறுக்க முடியாது எனக் குறிப்பிட்டிருந்தனர்.

**ஒட்டுமொத்தத்தில் இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமாக அமையவில்லை.**

## வினா இல. 08

இது தொழில் சட்டத்துடன் தொடர்புடைய ஓரளவு இலகுவான வினாவாகும். இது 2 பகுதிகளைக் கொண்டுள்ளது.

**பகுதி (a)** ஆனது ETF சட்டம் தொடர்பானதாகும். எவ்வாறாயினும், அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினா ETF சம்பந்தமான வினா என்பதைத் தெளிவாக அடையாளம் கண்டிருக்கவில்லை. அவர்கள் இது EPF தொடர்பான வினா எனக் கருதி விடையளித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் **தாரா** நாட்டை விட்டு வெளியேறுகின்ற காரணத்தால் அவரால் ETF இனைப் பெற்றுக்கொள்ள முடியும் எனக் குறிப்பிட்டிருந்தனர்.

**பகுதி (b)** பணிக்கொடைக் கணிப்பீடு பற்றியதாகும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருந்தனர்.

**ஒட்டுமொத்தத்தில் இவ்வினாவுக்கான செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.**

## வினா இல. 09

இவ்வினா மாற்றத்தகு சாதனங்கள் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் காசாளரின் கூற்றின் செல்லுபடித்தன்மை பற்றி வினவியிருந்த **பகுதி (a)** இற்கும் வங்கியாளரின் கடமைகள் பற்றி வினவியிருந்த **பகுதி (b)** இற்கும் சரியான விடை அளித்திருந்தனர்.

பகுதி **(a)** இற்குப் பெரும்பாலான பரீட்சார்த்திகள் குறுக்குக் கோடிட்ட காசோலை தொடர்பில் பின்பற்றப்பட வேண்டிய உரிய நிபந்தனைகளை ஏற்பிசைவு செய்திருந்ததுடன் காசாளரின் கூற்றும் சரியானது எனக் குறிப்பிட்டிருந்தனர்.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் **பகுதி (b)** இற்கு, வங்கியாளர் ஒருவரின் கடமைகளைச் சரியாகக் குறிப்பிட்டிருந்தனர்.

**ஒட்டுமொத்தத்தில் இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது.**

### <u>பகுதி D</u>

## வினா இல. 10

இவ்வினா 2 பகுதிகளை உள்ளடக்கியிருந்தது.

இந்த வினாவின் **பகுதி (A)** ஆனது ஒப்பந்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

**(a)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்குச் சரியாக விடையளித்திருந்தனர். அவர்கள் ஒப்பந்தமொன்றின் அத்தியாவசியக் கூறாகக் கருதப்படுகின்ற விருப்பறிவிப்பு மற்றும் ஏற்றுக்கொள்ளல் ஆகியவை இருக்காததன் காரணமாக **சமன்** மற்றும் **கஜன்** ஆகியோருக்கிடையில் செல்லுபடியான ஒப்பந்தம் ஏதுமில்லை எனக் குறிப்பிட்டிருந்தனர். மேலும், பெரும்பாலானவர்கள் இதனை ஒப்பந்தமொன்றுக்கு விருப்பறிவிப்புச் செய்வதற்கான ஓர் அழைப்பு எனக் குறிப்பிட்டிருந்தனர்.

**(b)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்குச் சரியான விடை அளித்து அதிக புள்ளிகளைப் பெற்றிருந்தனர். அவர்கள் இங்கு ஒப்பந்தமொன்றின் அத்தியாவசியமான கூறுகள் நிறைவு செய்யப்படாத காரணத்தால் **நிமால்** மற்றும் **சிதும்** ஆகியோருக்கிடையில் எவ்வித செல்லுபடியான ஒப்பந்தமும் காணப்படவில்லை எனக் குறிப்பிட்டிருந்தனர். சில பரீட்சார்த்திகள் **சிதும்** எதிர் விருப்பறிவுப்பு ஒன்றைச் செய்திருக்கிறார் எனக் குறிப்பிட்டிருந்தனர்.

**ஒட்டுமொத்தத்தில் வினாவின் இப்பகுதிக்கான செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது.**

இவ்வினாவின் **பகுதி (b)** ஆனது பொருட்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தினை அடிப்படையாகக் கொண்டதாகும்.

**(a)** இப்பகுதி பொருட்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின் உட்கிடை நிபந்தனைகளையும் கொள்வனவாளருக்குக் கிடைக்கக்கூடிய பரிகாரங்களையும் பரீட்சித்திருந்தது. தரப்பட்ட விவரணத்தில் நுவான் மற்றும் **சமீர** ஆகியோருக்கிடையில் பொருட்கள் விற்பனை ஒப்பந்தம் ஒன்று காணப்படுகிறது. எனவே, உட்கிடை நிபந்தனைகள் இந்த ஒப்பந்தத்தில் உள்ளடங்கியுள்ளன. அவை நோக்கத்திற்கான பொருத்தப்பாடு மற்றும் வணிகத் தரம் என்பவையாகும் (பொருட்கள் அதன் விவரணத்திற்கேற்ப கொள்வனவு செய்யப்படும்போது அப்பொருட்கள் அவ்விவரணத்துடன் ஒத்திருத்தல் வேண்டும்). எவ்வாறாயினும், பெரும்பாலான பரீட்சார்த்திகள் ஒரு உட்கிடை நிபந்தனையை மாத்திரம் குறிப்பிட்டிருந்தனர். ஆனால், பெரும்பாலான பரீட்சார்த்திகள் **நுவான்** செலுத்திய பணத்தை மீளப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவர் அல்லது தகுந்த பைசிக்கிள் ஒன்றுக்கான உரிமைக்கோரிக்கை செய்வதற்காக குறிப்பிட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு உரித்துடையவர் எனக் குறிப்பிட்டிருந்தனர்.

**(b)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் பொருட்கள் விற்பனைச் சட்டத்துடன் தொடர்புடைய தற்போதுள்ள பொருட்கள் மற்றும் எதிர்காலப் பொருட்கள் பற்றிச் சரியாக விபரித்திருந்ததுடன் பெரும்பாலான பரீட்சார்த்திகள் இதற்காக வழங்கப்பட்ட 04 புள்ளிகளில் பெரும்பாலானவற்றைப் பெற்றிருந்தனர்.

**ஒட்டுமொத்தத்தில் வினாவின் இப்பகுதிக்கான செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.**

- - -

**<u>பரீட்சார்த்திகளின் தேர்ச்சி மட்டத்தினை மேம்படுத்தும் பொருட்டு கவனத்திற்கொள்வதற்கான பொதுவான விடயங்கள்</u>:**

**(1)** பாடத்திட்டத்தை முழுமையாகப் படிப்பதுடன் புதிய பாட விடயங்கள் மீது கூடிய கவனத்தையும் செலுத்தவும்.

**(2)** வினாவை மிகக் கவனத்துடன் வாசித்து, வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடை அளிக்கவும்.

**(3)** வினைச் சொல் நிரல் ஒன்று வினாப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்களைத் தவிர ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒவ்வொரு வினைச்சொல்லினைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் வினைச் சொல் நிரலில் தரப்பட்ட வினைச்சொல்லின் வரைவிலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

**(4)** சுய கற்றல் பாடநூல், மேலதிக புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் பாடத்துடன் சம்பந்தப்பட்ட ஏனையவற்றை படிக்கவும்.

**(5)** விடையெழுதும்போது சரியாக அடையாளம் கண்டு அவற்றை அடிப்படைக் கோட்பாட்டு எண்ணக் கருக்களுடன் ஒப்பிடுவதற்கும் தேவையான ஆற்றல்களை வளர்த்துக் கொள்ளுங்கள்.

**(6)** கையெழுத்து தெளிவாக இருப்பதையும் வினா இலக்கங்கள் துல்லியமாக எழுதப்பட்டிருப்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

**(7)** வினாப்பத்திரத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கடைப்பிடியுங்கள்.

**(8)** கடந்தகால வினாப்பத்திரங்கள் மற்றும் விடைகளைக் கற்பதன் மூலம் உங்கள் அறிவினை மேம்படுத்திக் கொள்ளுங்கள்.

**(9)** முறையான நேர முகாமை.

**(10)** விடைப்பத்திரங்களை ஒப்படைப்பதற்கு முன் வினா இலகங்கள் உரியவாறு உரிய இடங்களில் இடப்பட்டுள்ளனவா என்பதை முறையாகப் பரீட்சியுங்கள்.

**(11)** முன்னாயத்தத்துடனும் வெற்றியடையும் எதிர்பார்ப்புடனும் பரீட்சைக்குத் தோற்றுங்கள்.

- * * * -